1995 நவம்பர் 3]

எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் 7-40 ஏக்கர் நிலத்தை பெண்ணலூர் என்ற கிராமத்தில் தேர்வு செய்து அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறார். அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கிடையில் தற்காலிகமாக மாற்று ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்ன யோசனை உபயோககரமாக இருக்குமேயானால், துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு 'வினாக்கள் விடைகள்' நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 14, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

14—

சிவகிரி பேரூராட்சியில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்

*26655—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகிரி பேரூராட்சியில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியினுடைய பேரூராட்சிகளிலேயே அதிக மக்கள் தொகை கொண்டிருக்கின்ற பேரூராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற சிவகிரியில் 35,000 மக்கள் தொகையில் 30,000 பேர் இந்த நெசவுத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் சிவகிரி பேரூராட்சியிலே அரசின் சார்பிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை

நிர்ணயம் செய்து அதன் மூலமாக நெசவாளர்களுடைய வாழ்க்கையை வளமுறச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்தக் கூட்டுறவுச் சங்கம் வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்று நெசவாளப் பெருங்குடி மக்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும். இந்தத் தமிழகத்திலே எந்தெந்தத் துறையிலே குறை இருக்கிறதோ அதையெல்லாம் தீர்த்து வைத்து தன்னிகரல்லாத தலைவி என்று இந்தத் தரணியே போற்றக்கூடிய விதத்திலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் புண்ணியத் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலே மனிதனை மனிதனாக்க, ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்பதைப் போக்கி, மானத்தையும் மதிப்பையும் அளித்துக் கொண்டிருக்கின்ற மகத்தான பணியை மறைமுகமாக குடத்தின் மேல் விளக்கமாக இருந்து செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, நெசவாளர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு இந்த கூட்டுறவுச் சங்கத்தை நிறுவுவீர்களேயானால் அதன் மூலமாக அதிகப்படியான கடன் தொகைகளை குறைந்த வட்டி வீதத்திலும் அதிகப்படியான நூல்களையும் பெற்று தங்களுடைய வாழ்க்கை வசதியை மேம்பாடு செய்துகொள்வதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதால மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதய தெய்வத்தினுடைய அனுமதியோடு மீண்டும் இந்தத் திட்டத்தை மறுபரிசீலனைச் செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பாக கைத்தறிகள் *6,000*மும் தனியார் கைத்தறிகள் *2,000*மும், விசைத் தறிகள் *560*ம் இருக்கின்றன. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற சிவகிரி கிராமத்தில் ஏற்கனவே தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் சார்பாக *96* விசைத்தறிகளுடன் ஒரு விசைத்தறிக் கூடம் இயங்கி வருகிறது. ஆனால் அதில் தற்போது *62* விசைத் தறிகள் தான் இயங்குகின்றன. மீதி *34* விசைத் தறிகளுக்கு பயனாளிகள் வருவதில்லை. அப்படிப் பயனாளிகள் வருவார்கள் என்று சொன்னால் இந்த விசைத்தறி கூடத்தையே விரிவாக்குவதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய *3* பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் சிவகிரியிலே இருக்கக்கூடிய பஞ்சாலை நிறுவனத்திலே *96* விசைத்தறிகளிலே *62* விசைத்தறிகள் மட்டுமே

1995 நவம்பர் 3]

இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. காரணம் விசைத்தறிகள் நிறுவப்பட்டு கிட்டத்தட்ட 40,50 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கின்ற நிலையில் அவை மிகவும் பழமையாக இருப்பதால் அவற்றை பயன்படுத்த முடியாத சூழ்நிலையில்தான் அவைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. புதிய விசைத்தறி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக புதியதாக அமைத்துக் கொடுப்பார்களேயானால் இந்த தனியார் விசைத்தறிகள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கத்திலே பயன் அடைவதன் மூலம் அரசுக்கு போதிய வருமானமும் அதன்மூலம் வேலைவாய்ப்பும் நிறைய கிடைக்கிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், பழைய விசைத்தறிகளைப் புதுமையாக்கி அதை விரிவுபடுத்தி, மீண்டும் பல்வேறு நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கான திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பழைய விசைத்தறிகள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன. இன்றைக்கு எல்லா இடங்களுக்கும் பழுதுபட்ட விசைத்தறிகளை மாற்றி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருப்பின் அந்த விசைத்தறிகள் மாற்றப்படும். அதைப்பற்றி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்குச் சொன்னாலே அவர்கள் மாற்றித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

15—

அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறனை உயர்த்துதல்

*42759—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறன் 12,500-இல் இருந்து 25,000 ஸ்பிண்டில்களாக உயர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS